# DEPOSITION OF WITNESS.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 74/2024**

**PROSECUTION WITNESS No - PW8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.செந்தில்குமார்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of March 2026.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**(R.O.C.No.34833/2025/F1, நாள்.13.06.2025–ன் படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020–ன் படி கடலூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையிலிருந்து திரு.செந்தில்குமார், காவல் ஆய்வாளர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக ஆஜராகி திரு.அருண், இளநிலை உதவியாளர் என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்.) (மேலும் சாட்சிக்கு காணொலி காட்சி வழியாக விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே சாட்சிக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கடலூர் மாவட்டம் நெய்வேலி தெர்மல் காவல்நிலைத்தில் காவல் ஆய்வாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் தேதியன்று பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது பசுபதிபாளையம் உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர், 21.01.2022 ஆம்

தேதியன்று பதிவு செய்த காவல்நிலைய குற்ற எண்.48/2022. ச.பி. 294 பி, 3(1) TNPPDL Act வழக்கின் முதல் தகவல் அறிக்கையை 31.01.2022 ஆம் தேதியன்று எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டேன். எனக்கு முன்னால் விசாரணை செய்த திரு.சந்திரசேகர் பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்து வைத்திருந்தார். அது சரியாக இருந்ததால் நான் மேற்கொண்டு எதுவும் தயார் செய்யவில்லை. **உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் கந்தசாமி, சரவணக்குமார், செந்தில்குமார், சக்கரவர்த்தி ஆகியோரை விசாரித்து 161 குவிமுச வாக்குமூலம் பதிவு செய்திருந்தார். நான் மேற்சொன்ன சாட்சிகளை விசாரித்தபோது அவர் பதிவு செய்திருந்த 161 குவிமுச வாக்குமூலத்தில் சொன்ன மாதிரியே சொல்லி இருந்ததால் நான் மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் சேதமடைந்த புலியூர் புறக்காவல்நிலைய கதவு மற்றும் ஜன்னல் கண்ணாடிகளுக்கு சேதமதிப்பீடு சான்று வழங்கிய திரு.சக்கரவர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகர் என்பவரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினமே இறுதி அறிக்கை எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294 பி இ.த.ச. உ/இ 3(1) TNPPDL Act ன் படி தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் காற்று அடித்து கண்ணாடி உடைந்தது என்றும் ஆகையால் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் படி கண்ணாடி உடைத்ததாகத்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் இந்த வழக்கில் நீங்கள் கண்ணாடி கதவு உடைந்ததற்கும் சேர்த்து சேதமதிப்பீடு பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் எதிரி தான் கண்ணாடியையும், கதவிலும் கல் கொண்டு எரிந்துள்ளார். ஆகையால் கதவிற்கும், கண்ணாடிக்கும் சேர்த்து சேத மதிப்பீடு வழங்கியுள்ளார். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:09:05 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.